# நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரியில் 2023-2024ம் கல்வி ஆண்டுக்கான மருத்துவம் சாரா கல்வி சேர்க்கை

## கல்வித் சேர்க்கை எண்ணிக்கை

| Sl. No. | Name of the Course | | Seats |
|---|---|---|---|
| **PARA MEDICAL EDUCATION – B.Sc Allied Health Science Courses** | | | |
| 1. | B.Sc – Radiology and Imaging Technology | 3 years course + 1 year internship | 10 |
| 2. | B.Sc – Respiratory Therapy | 3 years course + 1 year internship | 04 |
| 3. | B.Sc – Operation Theatre and Anaesthesia Technology | 3 years course + 1 year internship | 10 |
| 4. | B.Sc – Medical Laboratory Technology | 3 years course + 1 year internship | 10 |
| 5. | B.Sc – Physician Assistant | 3 years course + 1 year internship | 06 |
| 6. | B.Sc – Critical Care Technology | 3 years course + 1 year internship | 05 |
| **DIPLOMA COURSES** | | | |
| 7. | Diploma in Radio Diagnosis Technology Couse | 2 years course + 3 month internship | 20 |
| 8. | Diploma in Medical Laboratory Technology (DMLT) | 2 years course + 3 months internship | 10 |
| **PARA MEDICAL EDUCATION – CERTIFICATES COURSES** | | | |
| 9. | Emergency Care Technician | 1 years course + 3 months training | 10 |
| 10. | Anaesthesia Technician | 1 years course + 3 months training | 10 |
| 11. | Theatre Technician | 1 years course + 3 months training | 10 |
| 12. | Orthopeadic Technician | 1 years course + 3 months training | 10 |
| 13. | Multipurpose Hospital Worker (MPHW) | 6 months course + 6 months training | 20 |

### கல்வித் தகுதி

வரிசை எண்.1 முதல் 12 வரை குறிப்பிட்டுள்ள படிப்புகளுக்கு 12ம் வகுப்பில் இயற்பியல், வேதியில், உயிரியல் (அ) தாவரவியல், விலங்கில் பாடப்பிரிவுகளில் படித்து தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.

வரிசை எண். 13ல் குறிப்பிட்டுள்ள படிப்பிற்கு பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரியில் 2023-2024ம் கல்வி ஆண்டுக்கான மருத்துவம் சாரா பி.எஸ்சி பட்டப்படிப்புகள், டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான சேர்க்கை விபரம்**

## B.Sc Degree (3 years + 1 year Internship)

1. கதிரியக்கவியல் மற்றும் இமேஜிங் தொழில்நுட்பம் (**Radiology and Imaging Technology)**

   இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   கதிரியக்க சிகிச்சை அளிப்பது பற்றிய படிப்பாகும். மனித உடலில் உள்ள நோய்களை கதிரியக்கம் மூலம் கண்டறிவது, கதிரியக்க எக்ஸ்ரே ரேடியோகிராபி, எம்.ஆர்.ஐ. போன்ற அணுமருத்துவம் உள்ளிட்ட பல்வேறு இமேஜிங் நுட்பங்களைக் கொண்டு நோய்களையும், நோய்களின் தன்மையையும் கண்டறிவது பற்றிய படிப்பாகும்.

   புற்றுநோய் தாக்கியவர்களுக்கு கதிரியக்க சிகிச்சை அளிப்பது. இதில் உடற்கூறியியல், செயலியல், புற்றுநோய் வகைகள், கதிரியக்க முறைகள், அவைசார்ந்த இயற்பியல் ஆகிய பாடங்களைப் பற்றி படிப்பாகும்.

   படித்து முடித்தபின் கதிரியக்க சிகிச்சை கருவி உள்ள புற்றுநோய் மையங்களில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளன.

2. சுவாச சிகிச்சை (**Respiratory Therapy)**

   இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள், அறுவை சிகிச்சை செய்தவர்கள் ஆகியோருக்கு மூச்சுப் பயிற்சி கொடுப்பது, மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படும் பொழுது கருவிகள் மூலம் சிகிச்சை அளிப்பது தொடர்பான படிப்பாகும்.

3. அறுவை அரங்கம் மற்றும்  மயக்க மருந்து தொழில்நுட்பம் (**Operation Theatre and Anaesthesia Technology)**

   இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

அறுவை சிகிச்சையின் போது மருத்துவருனான சிகிச்சை சேவைகள், நோயாளியின் மயக்கமருந்து நிலை சிகிச்சை, அறுவை சிகிச்சை மயக்கநிலை தொடர்பான கண்காணிப்பு சேவை, நோயாளியின் தொடர் கவனிப்பு மருத்துவம் தொடர்பான படிப்பு.

படித்து முடித்தபின் மருத்துவமனைகளில் பணிபுரிய அதிக வாய்ப்புகள் உள்ளன.

4. மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம் (**Medical Laboratory Technology)**

இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

மருத்துவ ஆய்கங்களான உயிர்வேதியியல், நோய்கூறியியல், நுண்ணுயிரியல் மற்றும் இரத்த வங்கி சேவைகள், இரத்தம், மலம், சிறுநீர் போன்றவற்றை பரிசோதனை செய்து நோயைக் கண்டுபிடிக்கும் முறைகளை பற்றிய படிப்பாகும்.

படித்து முடித்த பின் மருத்துவ ஆய்வகங்களில் பணிபுரிய அதிக வாய்ப்புகள் உள்ளது.

5. மருத்துவ உதவியாளர் (**Physician Assistant)**

இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

நோயாளியின் உடல்நலம் தொடர்பான மருத்துவ பராமரிப்பு சிகிச்சைகள், உடல்நல ஆலோசனை வழங்குதல், மருந்து உட்கொள்ளல் அளவு மற்றும் தொடர் பரிசோதனை ஆலோசனை, மருத்துவம் தொடர்பான தொடர் ஆலோசனை தொடர்பான படிப்பு ஆகும்.

படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய அதிக வாய்ப்புகள் உள்ளது.

6. சிக்கலான பராமரிப்பு தொழில்நுட்பம் (**Critical Care Technology)**

இது மூன்றாண்டு கால படிப்பு மற்றும் ஒராண்டு பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

சிக்கலான மருத்துவ சிகிச்சைகளில் பணி புரிதல், அறுவை அரங்கில் பணிபுரிதல், நோயாளிகளின் சிகிச்சை கவனிப்பு, மருத்துவ கவனிப்பு

தொடர்பான பணி, அவசர சிகிச்சை பிரிவுகளில் பணிபுரிதல் போன்ற பணிகள் தொடர்பான கல்வி ஆகும்.

படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய அதிக வாய்ப்புகள் உள்ளது.

**<u>Diploma course (2 years) + 3 months Intership</u>**

1. டிப்ளமோ ரேடியோ கண்டறிதல் தொழில்நுட்பம் (**Diploma in Radio Diagnosis Technology)**

   இது இரண்டாண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   மனித உடலில் உள்ள நோய்களைக் கண்டறிவது, கதிரியக்க எக்ஸ்ரே ரேடியோகிராபி, எம்.ஆர்.ஐ. போன்ற அணு மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு இமேஜிங் நுட்பங்களைக் கொண்டு நோய்களையும், நோய்களின் தன்மையையும் கண்டறிவது பற்றிய படிப்பாகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களில் ரேடியோ கண்டறிதல் பணி வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

2. டிப்ளமோ மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம் (**Diploma in Medical Laboratory Technology)**

   இது இரண்டாண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   மருத்துவ ஆய்கங்களான உயிர்வேதியியல், நோய்கூறியியல், நுண்ணுயிரியல் மற்றும் இரத்த வங்கி சேவைகள், இரத்தம், மலம், சிறுநீர் போன்றவற்றை பரிசோதனை செய்து நோயைக் கண்டுபிடிக்கும் முறைகளை பற்றிய படிப்பாகும்.

   படித்து முடித்த பின் மருத்துவ ஆய்வகங்களில் பணிபுரிய அதிக வாய்ப்புகள் உள்ளது.

## Certificate course (1 year) + 3 months Internship

1. அவசர சிகிச்சை தொழில்நுட்பவியலாளர் (**Emergency Care Technician)**

   இது ஓராண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   ஆவசர சிகிச்சை பகுதியில் நோயாளிகளுக்கு செய்யப்படும் சிகிச்சையின் போது உதவுவது பற்றி படிப்பதாகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளது.

2. மயக்க மருந்து தொழில்நுட்பவியலாளர் (**Anaesthesia Technician)**

   இது ஓராண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   அறுவை அரங்குகளில் அறுவை சிகிச்சைகளின் போது மயக்க மருத்துவருக்கு உதவி புரியும் வேலைகளைப் பற்றி படிப்பது ஆகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளது.

3. தியேட்டர் தொழில்நுட்பவியலாளர் (**Theatre Technician)**

   இது ஓராண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   அறுவை அரங்குகளை பராமரிப்பது, சுத்தமாக வைத்துக் கொள்ள உதவுவது, அறுவை சிகிச்சைகளின் போது உதவுவது போன்ற வேலைகளைப் பற்றி படிப்பது ஆகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளது.

4. எலும்பியல் தொழில்நுட்பவியலாளர் (**Orthopeadic Technician)**

   இது ஓராண்டு கால படிப்பு மற்றும் மூன்று மாத பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   எலும்பு முறிவு சிகிச்சை, மாவுக்கட்டு போடுதல் ஆகியவற்றை எலும்பு சிகிச்சை நிபுணருக்கு உதவுவது பற்றி படிப்பதாகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளது.

5. பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் (**Multipurpose Hospital Worker)**

   இது ஆறு மாத கால படிப்பு மற்றும் ஆறு மாத கால பயிற்சியுடன் கூடிய கல்வியாகும்.

   இதற்கு S.S.L.C படித்திருந்தால் போதும். இது ஒரு ஆண்டு கால படிப்பாகும். மருத்துவமனையின் வேலைகளான நோயாளிகளைப் பராமரிப்பது, ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாதுகாப்பாக மாற்றுவது, அவசர சிகிச்சைகளில் உதவுவது, மருத்துவமனையின் அனைத்து வகையான வேலைகளிலும் மருத்துவருக்கும், செவிலியருக்கும் உதவுவது பற்றி படிப்பது ஆகும்.

   படித்து முடித்த பின் மருத்துவமனைகளில் பணிபுரிய வாய்ப்புகள் உள்ளது.

மேற்கண்ட பிரிவுகளுக்கான 2023-2024ம் ஆண்டுக்கான கல்வி சேர்க்கை நாமக்கல், அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் என்பதை தெரிவிக்கப்படுகிறது. **மேலும் கல்வி சேர்க்கை தொடர்பான விபரங்கள் அறிய https://tnmedicalselection.net இணையதளத்தை அணுகவும்.**